1996 பிப்ரவரி 20]

67—

ஆழ் குழாய்க் கிணறு ஏற்படுத்தல்

*** 35475—திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, அண்டனூர் ஊராட்சி மஞ்சம்பட்டி பகுதிக்குக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஆழ் குழாய்க் கிணறு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10.30

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு அவசியமான ஒரு கேள்வியை மிகுந்த நம்பிக்கையோடு நான் கேட்டிருந்தேன். ஆனால், மாணபுமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்கிற பதிலைச் சொல்லிவிட்டு அமர்ந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிக வறண்ட மாவட்டம் என்பது உங்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். அங்கே ஆழ் குழாய்க் கிணறுகளை கூட்டுறவுத் துறையின் மூலம் அமைக்க நபார்ட் வங்கியிலிருந்து 1½ கோடி ரூபாய் மானியமாக, புதுக்கோட்டை போர்-வெல் கூட்டுறவுத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தின் அடிப்படையில், 1½ கோடி ரூபாயை நபார்ட் நிறுவனம் நிதியாக வழங்கியிருக்கிறது. கூட்டுறவு சொசைட்டிகளும் பதிவு செய்யப்பட்டு, அந்த சொசைட்டிகளின் மூலமாக ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்து, அதன்மூலம் விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்கிற அடிப்படையில் இப்போது கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு மின் இணைப்பு பிரையாரிட்டி முறையில் கொடுக்கமுடியாத ஒரு சூழ்நிலையில் அந்த திட்டம் இப்போது முடங்கியிருக்கிறது. அந்தத் திட்டத்தைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே கூட்டுறவு முறையில் இயங்க இருக்கிற அந்த ஆழ் குழாய் கிணறு திட்டத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கி அவர்களை இந்த அரசு ஊக்கப்படுத்துவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1996 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளைப் பொறுத்தமட்டிலும் மட்டுமல்ல, தமிழகத்திலேயுள்ள எல்லா விவசாயிகளுடைய நம்பிக்கையைப் பெற்ற அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக ஆழ்குழாய்க் கிணறுகளைப் போடமுடியுமா என்ற கேள்வியைத்தான் இங்கே எழுப்பினார்கள். விவசாயிகளுக்கு உதவவேண்டுமென்ற நோக்கத்திலே தான் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமுள்ள சிறு பாசன இயந்திரங்களை வாடகைக்கு எடுத்து அந்த விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். நபார்டு மூலமாக கடன் பெற்று சங்கம் அமைத்து, அவர்கள் ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. மின்சாரத்தைப் பெறவேண்டுமென்று சொன்னால், அதற்குரிய உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அது என்னுடைய கையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஆழ்குழாய்க் கிணறு ஏற்படுத்துவது சம்பந்தமாகத்தான் கேட்டிருக்கிறேன். விவசாயத் துறையைச் சார்ந்த மற்றவைகளைப் பற்றி நான் சொல்லவில்லை. புதுக்கோட்டையில் புதுக்கோட்டை போர்வெல் என்கிற திட்டம் அமல்படுத்தப்பட்டு அதில் நடைமுறைச் சிக்கல் இருக்கின்ற காரணத்தால் மின்சாரத்தில் முன்னுரிமை கொடுத்து வழங்கமுடியாத காரணத்தால் விவசாயிகள் ரூ. 1 இலட்சம், ரூ. 2 லட்சம், ரூ. 5 லட்சம் கட்ட வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் இயங்கி வருகின்ற அந்த ஆழ்குழாய்க் கிணறுகள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூட்டுறவுத் துறை என்கிற காரணத்தால், அதற்கு முன்னுரிமை கொடுத்து இந்த அரசு மின்சாரம் வழங்கினால், நிச்சயமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 1000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு வங்கிகள் கடன் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறது. இந்த ஒரு உதவியை மட்டும் இந்த அரசு செய்யுமா என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அரசின் மூலமாக தெரிவிக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போட்ட கேள்வி, புதுக்கோட்டை தொகுதி, ஆண்டவூர் ஊராட்சி மஞ்சப்பட்டி பகுதிக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஆழ்குழாய்க் கிணறு போடமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு

1996 பிப்ரவரி 20]

ஊக்கப்படுத்துகின்ற அரசு இந்த அரசு. ஆழ்குழாய்க் கிணறு அரசாங்கம் போடமுடியாது. கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, அவர்கள் விவசாயம் செய்ய முன்வந்திருப்பார்கள் என்று சொன்னால், நபார்டு வங்கியில் கடன் பெற்று இருப்பார்கள். அந்த முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு மின்சாரம் வேண்டுமென்று சொன்னால், தனிப்பட்ட கேள்வி போட்டால், அதற்கு சம்பந்தபட்ட துறையினுடைய அமைச்சர் பதிலளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

68—

நடைபாதை பாலத்தை அகலப்படுத்துதல்

*** 78856**—*திரு. வி. கே. சின்னசாமி:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட கீழ்பவானி வாய்க்காலின் (LBP) குறுக்கே உள்ள சிறிய நடைபாதை பாலத்தை கரும்பு விவசாயிகள் பயன்பெற கரும்பு சாலைத் திட்டத்தில் சேர்த்து அகலப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதி கோபி தாலுக்காவானது சக்தி சுகர்ஸ் ஏரியாவில் வருகிறது. ஆகவே இந்த சக்தி சுகர்ஸ் நிறுவனத்திற்கு வருடத்திற்கு விவசாயிகளிடமிருந்து எவ்வளவு ரூபாய் கரும்பு செஸ் வாரியாக வசூலிக்கப்படுகிறது. ஆகவே நான் கேட்டிருக்கின்ற இந்தத் திட்டம் மிக முக்கியமான ஒன்று. அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். ஆனால் அந்தக் கரும்பை எடுத்துச் செல்வதற்கு வழியில்லாமல் வண்டிகள் மூலமாக வைத்துக் கொண்டு அந்த லாரிகளை வெளியிலே 2 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர் தூரத்திற்கு நிறுத்தி, அதற்குப் பின்பு லாரியிலே லோடு செய்து, அதற்கு மேல் சக்தி சுகர்சிற்கு எடுத்துச் செல்கின்ற நிலை